முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண்.85/2022
C/W அ.வ.எண்.15/2023

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி – நாள் 21–04–2026.

பெயர் = அழகர்சாமி

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் கு.வி. தொடர்ச்சி–

(1) பிராதில் ராஜேந்திரன் என்பவர் என் அப்பாவிற்கு மூத்தசகோதரர் என சொல்லியுள்ளேன் அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம். என் தந்தை எப்போது இறந்தார் என எனக்கு ஞாபகமில்லை. என் அப்பாவின் இறப்புசான்றிதழ், வாரிசுசான்றிதழ் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளோம் அவர் தாக்கல் செய்யவில்லை என சாட்சி கூறுகிறார். நானும், என் சகோதரர் காசி, கேசவன் ஆகியோர் சொத்துக்களை வாய்மொழியாக பிரித்ததாக சொல்லியுள்ளேன் எப்போது பிரித்தோம் என தேதி சொல்லவில்லை என்றால் சரிதான். எந்தெந்த சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாகூர்மீரா என்பவர் 2021ல் என் தந்தை பெயரில் தவறாக பட்டா மாறியுள்ளது என வருவாய்கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து எங்கள் தரப்பில் ஆட்சேபணை இல்லை என கேட்டு வந்தார் என்றால் இல்லை. வருவாய்கோட்டாட்சியரிடமிருந்து விசாரணைக்கு வரசொல்லி எனக்கு அறிவிப்பு வந்ததா என்றால் எனக்கு எதுவும் வரவில்லை என் அண்ணன் கேசவனுக்கு வந்திருக்கும் என சாட்சி கூறுகிறார்.

(2) கேசவன் பெயருக்கு பட்டா (வா.சா.ஆ.6) மாறிய விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நானும், என் அண்ணனும் கூட்டு சதிசெய்து வா.சா.ஆ.6 ல் பெயர் மாற்றிக்கொண்டோம் என்றால் சரியல்ல. நான் இதற்குமுன்பு வந்து சாட்சி சொன்ன நாளில் கேசவன் நீதிமன்றத்திற்கு வந்திருந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கில் என்ன நடக்கிறது என்று பார்வையிடதான் நீதிமன்றத்திற்கு வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஐ தவிர கேசவன் பெயரில் தீர்வை செலுத்தியதற்கு

ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஐ வழக்கு போடுவதற்காக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ஏற்படுத்திக்கொடுக்க கேசவனுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 எழுதப்பட்ட காலத்திலிருந்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்வரை என் வசம் இருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 எழுதிக்கொடுக்க எவ்வளவு செலவானது என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5 ல் பிராதில் சொல்லியபடி பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ள வாசகங்கள் இல்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதி நாகூர்மீரா என்னிடம் வந்து பட்டா மாற்ற ஆட்சேபணை இல்லை என கேட்டபிறகு வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 மோசடி ஆவணம் என்றால் சரியல்ல.

(3) வா.சா.ஆ.8 ன் படி பிரேமாவிற்கு எந்தவித பாத்தியமும், அனுபவமுமில்லை வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் அசலை நாங்கள் தாக்கல் செய்யவில்லை நகல் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் சகோதரர் கேசவனும் மாமனார் ராஜீ ஆகியோரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பிரதிவாதி நாகூர்மீராவை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக நானும், என் அண்ணனும் பிரேமாவும் சேர்ந்து உற்பத்தி செய்துகொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரேமா எந்த ஒரு காலத்திலும் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் 5 ஆவணங்கள் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டவை என்பதால் ரத்து செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 30.05.2022 ல் பிரேமா எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரிதான். 02.06.2022 ல் என் பெயருக்கு பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மறுநாளே பிரதிவாதி நாகூர்மீராவுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். தாவாச்சொத்து நாகூர்மீரா குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதால்தான் வா.சா.ஆ.1 ஏற்படுத்தியபிறகு 2 ம்பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல.

(4) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது மோசடியானது என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு தெற்கே இத்திக்குளம் ரோடு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 உமர்கர்த்தா ராவுத்தர் என்பவருக்கு ராமகிருஷ்ணபிள்ளை என்பவர் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 எழுதி பல

வருடங்கள் ஆகிவிட்டதால் அதனை ரத்து செய்வதற்கான காலவரையறை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 எழுதிகொடுத்தவர், வாங்கியவர்களையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு வடக்கேயும், கிழக்கேயும் நாகூர்மீராவின் பங்காளிகள் உள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஐ உரிமையான நபரிடமிருந்துதான் 2ம் பிரதிவாதியின் தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் என் சகோதரர் கேசவனிடம் கேட்டால்தான் தெரியும் என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.16 வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.16, 17 ஆகியவை வழக்கிற்காக நாங்கள் தயார் செய்துகொண்டது என்றால் சரியல்ல.

(5) நாகூர்மீரா கோட்டாட்சியரிடம் பட்டா கேட்டு மனுதாக்கல் செய்ததற்கு என் வழக்கறிஞர் கொடுக்கக்கூடாது என ஆட்சேபணை செய்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 வில்லங்கச்சான்றிதழ் எதற்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவாச்சொத்து எங்களுக்கு பாத்தியம் என்பதற்காக தாக்கல் செய்துள்ளோம் என சாட்சி கூறுகிறார். வா.சா.ஆ.3 ல் என் பெயரோ, எங்கள் குடும்பத்தார் பெயரோ பாத்தியத்தை காண்பிப்பதற்கு குறிப்புகள் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆக 1961 முதல் 1970 வரை தாவாச்சொத்திற்கு வில்லங்கச்சான்று தாக்கல் செய்துள்ளோம் அதில் வா.சா.ஆ–9 காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அவர் வாங்கிய இடம் தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ளது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தை வா.சா.ஆ.9 ன்படி 2ம் பிரதிவாதியின் தாத்தா கிரையம் பெற்ற பிறகு அவரது பிள்ளைகள் காதர்மீரா, முகமதுஉசேன், முகமது அபுபக்கர் ஆகிய மூவரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி மூவரும் அனுபவித்து வந்ததில் அவர்கள் குடும்ப பாகப்பிரிவினைப்படி தாவாச்சொத்து முகமது உசேனுக்கு வந்தது என்றால் சரியல்ல.

(6) முகமதுஉசேன் 2013ல் இறந்தபிறகு அவரது வாரிசுகள் 6 நபர்களில் ஏற்பட்ட வாக்கரால் பாகப்பிரிவினையில் தாவாச்சொத்து 2ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவாச்சொத்து 1961லிருந்து 2ம் பிரதிவாதியின் குடும்பத்தாரிடம்தான் இருந்துவந்தது என்றால் சரியல்ல. என் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நாகூர்மீரா என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்து அவருக்கு

தீர்ப்பு செய்யக்கேட்டுள்ள வழக்கை அனுமதிக்கவேண்டியது என்றால் சரியல்ல.

3, 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.04.21 14:38:33 +0530